வினாவிற்கு எனது தொகுதி மக்களின் நலனைக் கருதியும், ஏழை எளிய விவசாயிகளின் நலனைக் கருதியும், நிலத்தடி நீரை உயர்த்தும் நோக்கில் தடுப்பணை அமைக்க ரூ.1,094.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு, உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றியைப் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி அமர்கிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

சுற்றுலா நகரம்

***154—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தைச் சுற்றுலா நகரமாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி, தங்கத் தாரகை, மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதக் கமலங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றியினைச் சமர்ப்பித்து, தென் மாவட்டமான சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சாதாரண தொண்டனாக இருந்த என்னை, அண்ணாநகர் தொகுதியின் வேட்பாளராக்கி, வெற்றிப்பெறச் செய்து, அமைச்சராக்கி, இங்கே பதில் அளிக்கக்கூடிய

2011 ஆகஸ்ட் 10]

வாய்ப்பையெல்லாம் கொடுத்து, அங்கீகாரம் கொடுத்து, தொண்டர்களையெல்லாம் கண்ணின் இமைபோல காத்து வரும் எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

முற்பகல் 10—55

விடை: சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்வது குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் பெறப்படும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு, அந்தப் பகுதியிலே வருகை புரிவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையைப் பெற்று, ஒட்டப்பிடாரம் தொகுதியில், அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிக்கேற்ப திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின்படி செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி ஒட்டப்பிடாரம் என்பது, இந்திய நாட்டினுடைய சுதந்திரத்திற்காக 200 வருடங்களுக்கு முன்பே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் வாழ்ந்த இடம் பாஞ்சாலங்குறிச்சி. அதேபோல, செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்கள் பிறந்த இடம் ஒட்டப்பிடாரம். அவருடைய இல்லம் ஒட்டப்பிடாரத்தில் அமைந்திருக்கிறது. மகாகவி பாரதியார் அவர்கள் பிறந்ததும் முந்தைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எட்டயபுரம்.

உறுப்புலவர் அவர்கள் பிறந்ததும் அதே இடம். கட்டலாங்குளம் வீரன் அழகுமுத்துக்கோன், வல்லநாடு வெள்ளையத்தேவன், சுவர்னகிரி சுந்தரலிங்கம், வாஞ்சிநாதன் போன்ற எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை உள்ளடக்கியது ஓட்டப்பிடாரம் தொகுதி. அண்மைக்காலமாக இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் மெல்ல மெல்ல நாட்டுப்பற்று குறைந்து வரக்கூடிய இந்த வேளையில், தங்களுடைய உயிரைத் தியாகம் செய்த இதுபோன்ற மாவீரர்களுடைய வரலாறுகளையெல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் பாஞ்சாலங்குறிச்சியை மையமாக வைத்து இந்த வீரர்களுடைய வரலாறுகளையெல்லாம் ஒலி, ஒளிக் காட்சியாகக் காண்பிப்பதற்கும், பள்ளி மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்திலே அந்தப் பகுதியைச் சுற்றிக் காண்பிப்பதற்கும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்குமுண்டான நடவடிக்கைகளை அரசு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

தமிழகத்தையே விவசாயத்திலும், தொழிலிலும், கல்வியிலும் முதல்நிலை மாநிலமாக ஆக்கி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின்மூலம் இந்த ஓட்டப்பிடாரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளை முன்னிலை ஆக்குவதன்மூலமாக நிச்சயமாக தென் தமிழகத்திற்கே ஒரு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அதைத் தமிழக அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டு முதல் நினைவுக் கோட்டை தொடர்ச்சியாக மேம்பாடு செய்து வரப்படுகின்றது. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வ.உ. சிதம்பரனார் பிறந்த இடமான ஓட்டப்பிடாரத்திலே உள்ள அந்த இல்லம் செய்தித் துறையால்

2011 ஆகஸ்ட் 10]

பராமரிக்கப்பட்டு வருகின்றது. வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுடைய நினைவுக் கோட்டை சுற்றுலாத் துறைமூலமாக பராமரிக்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் மே மாதம் 11, 12 ஆம் தேதிகளிலே சுற்றுலாத் துறை சார்பாக அரசு விழா எடுக்கப்பட்டு அங்கே நடத்தப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாக வீரன் சுந்தரலிங்கம் மணி மண்டபம் சுவர்னகிரி பகுதியிலும், வீரன் அழகுமுத்துக்கோன் மணி மண்டபம் கட்டலாங்குளம் பகுதியிலும், அமுதகவி உமறுப் புலவர் அவர்களுடைய நினைவு இல்லம் எட்டையபுரத்திலும், வீரன் வெள்ளையத்தேவன் மணி மண்டபம் வல்லநாடு பகுதியிலும், மகாகவி பாரதியார் அவர்களுடைய நினைவு இல்லம் எட்டையபுரத்திலும், வாஞ்சிநாதன் அவர்கள் ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற மணியாச்சி பகுதியையும் அரசு பராமரித்து வருகின்றது. அரசு விழா எடுப்பது சம்பந்தமாகவும், சுற்றுலாத் துறை மூலமாக மேம்பாடு செய்வது சம்பந்தமாகவும், மாணவ, மாணவிகளை கவரக்கூடிய வகையில் ஒலி, ஒளிக் காட்சியாகக் காண்பிக்கவும் . . .

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாணவ, மாணவிகள் வரக்கூடிய வகையிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, சுற்றுலாத் துறையை வளமிக்க துறையாகவும், தமிழக மக்கள் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்ட வரும் வரவேண்டுமென்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க செஞ்சிக் கோட்டை தொல்பொருள் ஆய்வுத் துறை வசம் உள்ளதால், ஆண்டுதோறும்

அதற்கு சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால், அங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இதுபோன்று தமிழகத்தில் உள்ள தொல்பொருள் ஆய்வுத் துறை வசம் உள்ள புராதனச் சின்னங்களைச் செம்மைப்படுத்திட சுற்றுலாத் துறை மூலமாக தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது விழுப்புரம் மாவட்டத்திலே வரக்கூடிய சூழல் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஏற்கெனவே சுற்றுலாத் துறைமூலமாக பல பணிகள் நடைபெற்று வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி என்பதால், தனிக்கேள்வியாகப் போடும்பட்சத்திலே பராமரிப்பு சம்பந்தமான புள்ளிவிவரங்களைப் பெற்று, அவர்களுக்கு உரிய முறையிலே பதில் தெரிவிக்கப்படும் என்பதை நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

பேருந்து வசதி

***44—திரு. அ. நாஞ்சில் முருகேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளைக்கு மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*